# கிறிஸ்துவுக்காகப் பாடுபடுதல்

**மனன வசனம்**

**இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக் கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார். 1பேதுரு 2:21.**

**ஆராய்ச்சிக்கு**

**1பேதுரு 1:6; 1பேதுரு 3:13-22; 2தீமோ 3:12; 1பேதுரு 4:12-14; வெளி 12:17; 1பேதுரு 4:17-19.**

ஏப்ரல் 29 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

கிறிஸ்தவமார்க்கத்தின் முதல் சில நூற்றாண்டுகளில் உண்டான உபத்திரவம் குறித்த வரலாறு எல்லோரும் அறிந்ததே. சபைக்கு உண்டாகவிருந்த உபத்திரவம் குறித்து வேதாகமத்தில்தானே, குறிப்பாக அப்போஸ தலர் புத்தகத்தில் மேலோட்டமாகக் கொடுக்கப்பட்டிருக் கிறது. உபத்திரவமும், அதோடான பாடுகளும் கிறிஸ் தவர்களின் வாழ்க்கையில் இன்றும் நிஜமான ஓர் அனு பவமாகவே இருக்கிறது. அப்படித்தான் பேதுரு எழுது கிறார்.

‘இப்பொழுது கொஞ்சக்காலம் பலவிதமான சோத னைகளினாலே துக்கப்படுகிறீர்கள். அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப் பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்றதாயிருக்கிற உங் கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப் படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமை யுமுண்டாகக் காணப்படும்’ என்று முதல் அதிகாரத்தில் எழுதுகிறார். 1 பேதுரு 1:6,7. அந்த நிருபத்தின் இறுதி யிலும் கிட்டத்தட்ட அதே கருத்துதான் வெளிப்படுகிறது: ‘கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகி மைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந் திய தேவன்தாமே கொஞ்சக்காலம் பாடநுபவிக்கிற உங் களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலை நிறுத்துவாராக.’ 1பேதுரு 5:10.

அந்தச் சிறிய நிருபத்தில், கிறிஸ்துவுக்காகப் பாட னுபவிக்க வேண்டியதுபற்றி பேதுரு தன் வாசகர்களுக்கு நினைவூட்டும் மூன்று பெரும் பகுதிகள் உள்ளன.

1 2:18-25 2 3:13-21 3 4:12-19

எனவே, உபத்திரவத்தால் உண்டாகும் துன்பங்கள் ஒரு முக்கியக் கருத்தாக 1பேதுருவில் சொல்லப்படுவது புரிகிறது. அதுபற்றி இந்த வாரத்தில் படிப்போம்.

2017, மே 6 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்

## ஆதிகால கிறிஸ்தவர்களின் உபத்திரவம்

***1பேதுரு 1:6; 5:10 ஆகிய வசனங்களில் பேதுரு சொல்வது என்ன? வாசகர்கள் தங்களுக்குச் சம்பவித்துக் கொண்டிருந்ததை எவ்வாறு சந்திக்கவேண்டுமென்று அவர் சொன்னார்?***

---

---

ஒரு கிறிஸ்தவனாக இருந்தாலே கொடூரமாகக் கொல்லப்படும் நிலைதான் முதல் சில நூற்றாண்டுகளில் காணப்பட்டது. ஆதிக்கிறிஸ்தவர்களின் பாதுகாப்பு எவ்வளவு ஆபத்துக்குள்ளாகியிருந்தது என்பது ரோமப் பேரரசர் டிராஜனுக்கு எழுதப்பட்ட ஒரு கடிதத்திலிருந்து தெளிவாகத் தெரிகிறது. 1பேதுரு 1:1ல் சுட்டிக் காட்டப்படும் இரு பகுதிகளான பொந்து மற்றும் பித்தினியாவில் கி.பி. 111-113 இல் ஆளுநராக இருந்த ப்ளைனி என்பவன் அந்தக் கடிதத்தை எழுதியிருந்தான்.

கிறிஸ்தவர்கள் என்று குற்றஞ்சாட்டப்படுவோரை தான் என்ன செய்யவேண்டு மென்று கேட்டு ப்ளைனி அதை எழுதியிருந்தான். கிறிஸ்தவர்ககளை தான் கொன் றதாக விளக்கியிருந்தான். சிலர், தாங்கள் முன்பு கிறிஸ்தவர்களாக இருந்ததாகவும், இப்போது கிறிஸ்தவர்கள் இல்லையென்றும் சொன்னார்களாம். அப்படியானால் அவர்கள் டிராஜன் மற்றும் பிற தெய்வங்களின் சிலைகளுக்குத் தூபமிட்டும், இயேசு வைச் சபித்தும் அதை நிரூபிக்கும்படி ப்ளைனி சொன்னானாம்.

உயிரோடிருக்கும் ஒரு பேரரசனைத் தொழுகிற பழக்கம் ரோமில் இல்லை; ஆனாலும், 1பேதுரு அனுப்பப்பட்ட ரோம சாம்ராஜ்யத்தின் கிழக்குப் பகுதியில், பேரரசர்கள் அதை அனுமதித்தார்கள்; மக்கள் தங்களுக்குக் கோயில்களைக் கட்ட ஊக்குவித்தார்கள். சில கோயில்களில் அவர்களே பூசாரிகளை நியமித்து, பலி பீடங்கள்மேல் பலியிட்டார்கள். கிறிஸ்தவர்கள் தங்கள் மெய்ப்பற்றை பேரரச னுக்குக் காண்பிக்கும்படி, பேரரசனின் சிலைக்கு அவர்கள் தூபமிட்டு, வணங்கும் படி ப்ளைனி செய்தது, ஆசிய மைனரில் வெகுகாலமாகச் செய்யப்பட்டு வந்த ஒரு வழக்கம்தான்.

முதல் நூற்றாண்டின் பல்வேறு காலக்கட்டங்களில், கிறிஸ்தவர்களாக இருந் ததின்நிமித்தம் அவர்கள் கொடும் ஆபத்துகளைச் சந்திக்க நேரிட்டது. நீரோ (கி.பி. 54-68), டோமிசியன் (கி.பி. 81-96) போன்ற பேரரசர்களின் காலங்களில் இது முற்றிலும் உண்மையாக இருந்தது.

1பேதுரு நிருபத்தில் பேதுரு குறிப்பிடும் உபத்திரவமானது பெரும்பாலும் அவர் எழுதிய பகுதியில் நிகழ்ந்ததுதான். ஒரு சில உபத்திரவங்களைத்தான் அவர் குறிப்பிட்டுச் சொல்கிறார்; பொய்யாகக் குற்றஞ்சாட்டப்படுதல், உதாசனம் மற்றும் தூஷணம் போன்றவையும் அவற்றில் உண்டு. 1பேதுரு 2:12; 3:9; 4:14. உபத்திரவங்கள் கடுமையாக இருந்தபோதிலும், குறிப்பாக அக்காலத்தில் சிறை யில் அடைக்கப்படுவதும், மரணத்தண்டனை விதிக்கப்படுவதும் அதிகமாக இல்லை. ஆனாலும், பரந்துவிரிந்துகிடந்த முதல் நூற்றாண்டு சமுதாயத்தின ரிடையே ஒரு கிறிஸ்தவராக வாழ்வது விசுவாசிகளைப் பெரும் ஆபத்துக்குள் ளாக்குவதாக இருந்தது; தங்கள் நம்பிக்கைகளின் நிமித்தம் அவர்கள் உபத் திரவத் திற்குள்ளாகும் நிலை காணப்பட்டது. எனவே, ஒரு முக்கியப் பிரச்சனையைக் கையில் எடுத்துதான் பேதுரு தன் முதல் நிருபத்தை எழுதுகிறார்.

***தங்களுடைய விசுவாசத்தின்நிமித்தம் தங்களைத் துன்புறுத்துகிறவர்களிடம் கிறிஸ்தவர்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும்? 1பேதுரு 3:12-22. இயேசுவின் உபத்திரவங்களுக்கும் விசுவாசத்தின்நிமித்தம் உபத்திரவத்திற்கு ஆளாகும் விசுவாசிகளின் உபத்திரவத்திற்கும் இடையே இருந்த தொடர்பு என்ன?***

'நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்' என்று இயேசு சொன்னதைத்தான் 'நீதியினிமித்தமாக நீங்கள் பாடுபட்டால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்' என்று பேதுரு சொல்கிறார். மத் 5:10. கிறிஸ்தவர்கள் தங்களைத் தாக்குகிறவர்களைக் குறித்துப் பயப்படக்கூடாதென்றும், கிறிஸ்துவை தங்கள் ஆண்டவராக தங்கள் இருதயங்களில் பரிசுத்தம்பண்ண வேண்டுமென்றும் கூறுகிறார். 1பேதுரு 3:15. இயேசுவைக் குறித்த இந்த நிச்சயம், தங்களை எதிர்க்கிறவர்கள் கொடுக்கும் அச்சுறுத்தல்களை தங்கள் இருதயங்களிலிருந்து பிடுங்கி எறிய உதவும்.

தங்களிலுள்ள நம்பிக்கை குறித்து விவரிப்பதற்கு கிறிஸ்தவர்கள் எப்போதும் ஆயத்தமாக இருக்கவேண்டும்; மக்கள் விரும்புகிறவிதத்தில், சாந்தத்தோடும் வணக்கத்தோடும் சொல்லவேண்டும். 1பேதுரு 3:15,16.

தங்களைக் குற்றஞ்சாட்ட மற்றவர்களுக்கு எந்தக் காரணமும் கிடைக்காமல் கிறிஸ்தவர்கள் பார்த்துக்கொள்ளவேண்டும். சுத்தமான மனச்சாட்சி உடையவர்களாக விளங்கவேண்டும். 1பேதுரு 3:16. இது முக்கியம்; அப்போதுதான், குற்றஞ்சாட்டப்படுகிற கிறிஸ்தவனின் குற்றமற்ற வாழ்க்கையைக் கண்டு, மற்றவர்கள் வெட்கமடைவார்கள்.

தீமைசெய்து உபத்திரவம் அனுபவிப்பதில் எந்தப் புண்ணியமும் இல்லை. 1பேதுரு 3:17. நன்மைசெய்து, சரியானதைச் செய்து உபத்திரவம் அனுபவிப்பது ஒரு பெரிய மாற்றத்தை உண்டாக்கும். 'தீமைசெய்து பாடநுபவிப்பதிலும், தேவனுக்குச் சித்தமானால், நன்மைசெய்து பாடநுபவிப்பதே மேன்மையாயிக்கும்.' 1பேதுரு 3:17.

பிறகு, இயேசுவின் முன்மாதிரியை பேதுரு காட்டுகிறார். தம்முடைய நீதியின் நிமித்தம் கிறிஸ்து உபத்திரவம் அனுபவித்தார்; பரிசுத்தமும் தூய்மையுமான அவருடைய வாழ்க்கையானது, அவரைப் பகைத்தவர்களைக் கடிந்துகொள்வதாக இருந்தது. தவறுசெய்யாமல், சரியானதையே செய்து ஒருவர் உபத்திரவம் அனுபவித்திருப்பாரானால் அது இயேசுதான்.

ஆனால், அவருடைய உபத்திரவம்தான் இரட்சிப்பிற்கான ஒரே வழியையும் சாத்தியமாக்கியது. அவரை விசுவாசிப்பவர்கள் நித்திய வாழ்வின் வாக்குறுதியைப் பெற்றுக்கொள்ளும்படி அநீதியுள்ளவர்களுக்குப்பதிலாக நீதியுள்ளவராய் அவர் மரித்தார். 1பேதுரு 3:18.

தவறுசெய்ததற்காக அல்ல, நன்மைசெய்ததற்காக உபத்திரவமடைந்த அனுபவம் உங்களுக்கு உண்டா? ஒரு கிறிஸ்தவனாக இருப்பதைப்பற்றியும், கிறிஸ்துவின் குணத்தைப் பிரதிபலிப்பதுபற்றியும் அந்த அனுபவத்திலிருந்து என்ன கற்றுக்கொண்டீர்கள்?

## அக்கினிச் சோதனை

***1பேதுரு 4:12-14ஐ வாசியுங்கள். உபத்திரவத்தைக் கண்டு ஏன் திகைக்கவேண்டாமென்று பேதுரு கூறுகிறார்? 2தீமோ 3:12; யோவான் 15:18.***

ஒரு கிறிஸ்தவராக இருப்பதின்நிமித்தம் உபத்திரவத்தை அனுபவிப்பது கிறிஸ்துவின் உபத்திரவத்தில் பங்கெடுப்பது போன்றது என பேதுரு தெளிவாகச் சொல்லிவிடுகிறார். இது எதிர்பாராமல் உண்டாகக்கூடிய ஒன்று அல்ல. மாறாக, பவுல் எழுதுவதுபோல, 'அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்.' 2தீமோ 3:12. தம்முடைய சீடர்களுக்கு என்ன நேரிடலாமென்று இயேசுதாமே எச்சரித்திருக்கிறார்: 'அப்பொழுது, உங்களை உபத்திரவங்களுக்கு ஒப்புக்கொடுத்து, உங்களைக் கொலை செய்வார்கள்; என் நாமத்தினிமித்தம் நீங்கள் சகல ஜனங்களாலும் பகைக்கப்படுவீர்கள். அப்பொழுது, அநேகர் இடறலடைந்து, ஒருவரையொருவர் காட்டிக்கொடுத்து, ஒருவரையொருவர் பகைப்பார்கள்.' மத் 24:9,10.

எலன் ஒய்ட் இப்படி எழுதுகிறார்: 'இயேசு கிறிஸ்துவில் தேவபக்தியாய் வாழ்கிற அனைவருக்கும் இப்படியே நடக்கும். கிறிஸ்துவின் ஆவி ஊன்றப்பெற்றிருக்கும் ஒவ்வொருவருக்கும் உபத்திரவமும் நிந்தையும் காத்திருக்கின்றன. உபத்திரவத்தின் தன்மை காலத்திற்கேற்ப மாறலாம்; ஆனால் நியதி, அதாவது அதற்கு அடிப்படையான ஆவி மாறாது; கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்டோரை ஆபேலின் காலம்முதல் கொன்றுவரும் ஆவிதான் அது.' – *AA, p 576.*

***கடைசி நாட்களில் கிறிஸ்தவர்களுக்கு உபத்திரவம் உண்டென்பதுபற்றி வெளி 12:17 என்ன கூறுகிறது?***

எல்லாக் காலத்திலும் கிறிஸ்தவர்களுக்கு உபத்திரவம் உண்டு; அதனால்தான் அவர்கள் 'அக்கினிச் சோதனையை' அனுபவித்து வந்தார்களென பேதுரு கூறுகிறார். 1பேதுரு 4:12.

தீ ஒரு நல்ல உருவகம். அது அழிக்கக்கூடியதுதான்; ஆனால் அசுத்தங்களையும் அது நீக்கமுடியும். எது அக்கினியில் சோதிக்கப்படுகிறது என்பதை பொறுத்துதான் அது அமையும். வீடுகள் தீயில் எரிந்துபோய்விடும்; வெள்ளியும் பொன்னும் தீயால் சுத்திகரிக்கப்படும். ஒருவரும் உபத்திரவத்தை விலைகொடுத்து வாங்கக்கூடாது; ஆனால், உபத்திரவத்தை தேவன் நன்மையாக மாற்றமுடியும். அதனால், பேதுரு தன் வாசகர்களுக்கும் நமக்கும் சொல்வது இதுதான்: ஆம், உபத்திரவம் மோசமானதுதான்; ஆனால், எதிர்பாராமல் வந்துவிட்டதாக சோர்ந்துபோய் விடாதீர்கள். விசுவாசத்தோடு தொடர்ந்து முன்னேறுங்கள்.

தங்கள் விசுவாசத்தின்நிமித்தம் உபத்திரவப்படுபவர்களை உயர்த்தவும் ஊக்கப்படுத்தவும் அவர்களுக்கு உதவிசெய்யவும் நாம் என்ன செய்யலாம்?

**1பேதுரு 4:17-19; ஏசாயா 10:11,12; மல்கியா 3:1-6 ஆகிய வசனங்கள் பொதுவாகச் சொல்லும் கருத்து என்ன?**

நியாயத்தீர்ப்பின் பணியானது தேவனுடைய மக்களிடமிருந்து ஆரம்பிப்பதாகவே இந்த வசனங்கள் கூறுகின்றன. தேவபிள்ளைகளின் உபத்திரவங்களையும் தேவனுடைய நியாயத்தீர்ப்பையும் சம்பந்தப்படுத்தி பேதுரு பேசுகிறார். தேவனுடைய நியாயத்தீர்ப்பானது தேவனுடைய வீட்டாரிலிருந்து ஆரம்பிப்பதையே கிறிஸ்தவர்களின் உபத்திரவம் சுட்டிக்காட்டுகிறது என்கிறார். 'ஆகையால் தேவனுடைய சித்தத்தின்படி பாடநுபவிக்கிறவர்கள் நன்மை செய்கிறவர்களாய்த் தங்கள் ஆத்துமாக்களை உண்மையுள்ள சிருஷ்டி கர்த்தாவாகிய அவருக்கு ஒப்புக்கொடுக்கக்கடவர்கள்.' 1பேதுரு 4:19.

***தேவனுடைய நியாயத்தீர்ப்புபற்றி அறிய லூக்கா 18:1-8 எவ்வாறு உதவுகிறது?***

வேதாகமக் காலங்களில் நியாயத்தீர்ப்புகளை மக்கள் மிகவும் நம்பியிருந்தார்கள். நியாயத்தீர்ப்பு குறித்த மக்களின் மனநிலையை அறிந்துகொள்ள லூக்கா 18:1-8ல் உள்ள ஏழை விதவையின் சம்பவம் உதவுகிறது. தன் வழக்கை விசாரிக்கக்கூடிய ஒரு நியாயாதிபதி கிடைத்தால்மாத்திரமே தனக்கு வெற்றியென அந்த விதவை உணர்ந்திருந்தாள். வழக்கை நடத்த அவளிடம் பணமும் இல்லை; அந்தஸ்தும் இல்லை; கடைசியாக அந்த நியாயாதிபதியை வற்புறுத்தி, தன் வழக்கை விசாரிக்கச் செய்து, தனக்கு நீதிகிடைக்கச் செய்தாள். இயேசு சொல்வதுபோல, 'அந்தப்படியே தேவன் தம்மை நோக்கி இரவும்பகலும் கூப்பிடுகிறவர்களாகிய அவர்களுக்கு நியாயஞ்செய்யாமலிருப்பாரோ?' லூக் 18:7. பாவம் இந்த உலகத்திற்குள் தீமையைக் கொண்டுவந்துவிட்டது; தேவன் எல்லாவற்றையும் சரிசெய்ய வேண்டுமென்று காலம் நெடுகிலும் தேவ மக்கள் காத்திருக்கிறார்கள்.

'கர்த்தாவே, யார் உமக்குப் பயப்படாமலும், உமது நாமத்தை மகிமைப்படுத்தாமலும் இருக்கலாம்? தேவரீர் ஒருவரே பரிசுத்தர், எல்லா ஜாதிகளும் வந்து உமக்கு முன்பாகத் தொழுதுகொள்வார்கள்; உம்முடைய நீதியான செயல்கள் வெளியரங்கமாயின.' வெளி 15:4.

உலகத்தில் எவ்வளவோ தீமைகள் தண்டிக்காமல் விடப்பட்டுள்ளன; தண்டிக்காமல் விடப்படுகின்றன. எனவே, தேவன் நியாயமுள்ளவர், நீதியான நியாயத்தீர்ப்பு செய்வார் என்பது கிறிஸ்தவர்களாகிய நமக்கு ஏன் நமக்கு மிகவும் முக்கியமானதாக இருக்கிறது? நியாயம் நிலைநாட்டப்படும் என்கிற வாக்குறுதியிலிருந்து என்ன நம்பிக்கையைப் பெறுகிறீர்கள்?

## சோதனைகளுக்கு மத்தியிலும் விசுவாசம்

தங்கள் விசுவாசத்தின்நிமித்தம் உபத்திரவமடைந்து வந்தவர்களுக்குத்தான் பேதுரு எழுதினார். அந்த உபத்திரவம் மேலும் மோசமடைந்து வந்ததைத்தான் கிறிஸ்தவ வரலாறு காட்டுகிறது. பேதுரு எழுதியவற்றிலிருந்துதான் அதற்குப் பின்னான வருடங்களில் அநேகக் கிறிஸ்தவர்கள் ஆறுதலையும் தேறுதலையும் பெற்றுக்கொண்டார்கள். இன்றும்கூட அநேகர் அவற்றால் ஆறுதலடைகிறார்கள்.

உபத்திரவம் ஏன்? காலம் நெடுகிலும் கேட்கப்பட்டு வரும் கேள்வி இது. வேதாகமத்தில் முதன்முதலாக எழுதப்பட்ட புத்தகங்களில் ஒன்றான யோபு புத்தகத்தின் மையக் கருத்தே உபத்திரவம்தான். 'கொலைபாதகனாயாவது, திருடனாயாவது, பொல்லாங்கு செய்தவனாயாவது, அந்நிய காரியங்களில் தலையிட்டுக் கொண்டவனாயாவது' அல்லாமல், உபத்திரவமடைந்த ஒருவர் இருக்கக்கூடுமானால், இயேசுவுக்கடுத்து அது யோபுவாகத்தான் இருக்கமுடியும். 1பேதுரு 4:15. யோபுவைக்குறித்து தேவனும்கூட 'என் தாசனாகிய யோபின்மேல் கவனம்வைத்தாயோ? உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாகிய அவனைப்போல பூமியில் ஒருவனும் இல்லை என்றார்.' யோபு 1:8. யோபுவின் பரிதாப நிலையைப் பாருங்கள்; தான் மோசமானவனாக இருந்ததற்கு அல்ல, நல்லவனாக இருந்ததற்கே அவற்றை எல்லாம் அனுபவித்தார்.

***உபத்திரவத்தின் தோற்றம்பற்றி 1பேதுரு 5:8; வெளி 12:9; வெளி 2:10 ஆகிய வசனங்கள் சொல்வது என்ன?***

கிறிஸ்துவுக்கும் சாத்தானுக்கும் இடையில் நடக்கும் மாபெரும் போராட்டத்தின் நடுவில் நாம் இருப்பதே உபத்திரவத்திற்குக் காரணம். நம்முடைய இயல்புகளில் நன்மைக்கும் தீமைக்கும் இடையே நடக்கும் போராட்டத்தைச் சுட்டிக்காட்டும் ஓர் உருவகமென இந்தப் போராட்டத்தை நினைத்துவிடாதீர்கள். உண்மையிலேயே ஒரு பிசாசு இருக்கிறான்; உண்மையிலேயே ஒரு இயேசு மனிதர்களுக்காக நிஜமாக யுத்தம்செய்துகொண்டிருக்கிறார்.

***தற்போது நாம் எப்படிப்பட்ட பாடுகளை அனுபவித்துவந்தாலும், 1பேதுரு 4:19 இல் பேதுரு வலியுறுத்தும் கருத்து எவ்வாறு நமக்கு உதவக்கூடும்?***

நாம் உபத்திரவப்படும்போது, நாம் செய்த தீமையால் அந்த உபத்திரவம் உண்டாகாமல் இருக்கும்போது, யோபுவைப் போல்தான் நாமும் 'ஏன்?' என்கிற கேள்வியை எழுப்பிக்கொண்டே இருப்போம். பெரும்பாலும் அதற்கு நமக்கு பதிலே கிடைக்காது. நாம் என்ன செய்யலாமென பேதுரு கூறுகிறார். அதாவது, நம் உபத்திரவத்திற்கு மத்தியிலும் நம் ஆத்துமாக்களை தேவனிடம் அர்ப்பணிக்க வேண்டும்; நம் 'உண்மையுள்ள சிருஷ்டிகர்த்தரை' நம்பி, 'நன்மைசெய்ய' வேண்டும். 1பேதுரு 4:19.

தேவனுடைய குணத்தையும், அவருடைய தயவையும், உங்கள்மேல் அவர் வைத்துள்ள அன்பையும் தனிப்பட்ட விதத்தில் அறிந்துகொள்வது ஒரு கிறிஸ்தவருக்கு, அதிலும் உபத்திரவத்தில் இருக்கும் ஒரு கிறிஸ்தவருக்கு ஏன் முக்கியமானது? தேவனையும், நம்மேல் அவர் வைத்திருக்கும் அன்பையும் சிறப்பாக அறிந்துகொள்ள நாம் என்ன செய்யலாம்?

கிறிஸ்தவர்கள் சந்தித்த உபத்திரவம்பற்றி ஞாயிற்றுக்கிழமை படித்தோம். ஆரம்ப நூற்றாண்டுகளில் கிறிஸ்தவர்கள் சந்தித்த உபத்திரவம்பற்றி அறிய உதவும் கடிதம் இது. இது பேரரசருக்கு எழுதப்பட்டது: 'கிறிஸ்தவர்கள் என்று குற்றஞ்சாட்டப் பட்டு என்னிடம் வருகிறவர்களை நான் கையாள்கிற விதம் இதுதான்: அவர்கள் கிறிஸ்தவர்களா என்று விசாரிப்பேன்; அவர்கள் ஒத்துக்கொண்டால், மரணதண்டனை விதிக்கப்படுமென எச்சரித்து இரண்டுமுறை அதே கேள்வியைக் கேட்பேன்; அப்படியும் அவர்கள் பின்வாங்காவிட்டால், மரணதண்டனை விதிப்பேன். அவர்கள் நம்பிக்கை என்னவாகவும் இருக்கட்டும்; அடங்காமலும் விட்டுக்கொடுக்காமலும் பிடிவாதமாக இருப்பது தண்டனைக்குரியது என்பதில் சந்தேகமில்லை.

'தெய்வங்களை வழிபட்டபிறகும், அந்தத் தெய்வங்களின் சிலைகளோடு நான் கொண்டுவரும்படி கட்டளையிட்ட உங்கள் சிலையை திராட்சரசத்தோடும் சாம்பிராணியோடும் வழிபட்டபிறகும், தாங்கள் இன்று அல்லது என்றுமே கிறிஸ்தவர்கள் அல்ல என்று மறுத்து, கிறிஸ்துவைச் சபித்தவர்களை விடுதலைசெய்துவிடலாமெனத் தீர்மானித்தேன். ஏனெனில், உண்மையிலேயே கிறிஸ்தவர்களாக இருப்பவர்களை இவற்றில் எதையும் செய்ய கட்டாயப்படுத்தமுடியாதெனச் சொல்லப்படுகிறது. கிடைத்த தகவல்படி தங்களை முதலில் கிறிஸ்தவர்களெனச் சொன்ன மற்றவர்களும் பின்னர் அதை மறுத்தார்கள்; முன்னர் அந்த நம்பிக்கையில் அவர்கள் இருந்தது உண்மைதான்; ஆனால், சிலர் மூன்று வருடங்களுக்கு முன்னரோ, பலர் அநேக வருடங்களுக்கு முன்னரோ, இன்னும் சிலர் சுமார் இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னரோ அதிலிருந்து விலகிவந்தவர்கள். அவர்கள் எல்லாருமே உங்களுடைய சிலையையும் தெய்வங்களின் சிலைகளையும் வணங்கி, கிறிஸ்துவைச் சபித்தார்கள்.' – *2 Pliny Letters, p 401-403.*

# கலந்துரையாடக் கேள்விகள்

1 *ப்ளைனியின் கடிதங்களில் காணப்படுவதுபோல, கிறிஸ்தவர்கள் சந்தித்த முக்கியப் பிரச்சனை என்ன? வெளி 14:9-12இல் மூன்றாம் தூதனுடைய தூதில் சொல்லப்படுவதுபோல, கடைசிக்காலங்களில் இதேபோன்ற என்ன பிரச்சனைகள் உண்டாகும்? மாபெரும் போராட்டத்தில் சம்பந்தப்பட்ட சில முக்கியப் பிரச்சனைகள்பற்றி இதிலிருந்து என்ன தெரிகிறது?*

2 *'தேவனுடைய கற்பனையைக் கைக்கொள்கிறவர்கள்தாம் உலகத்தில் நியாயத்தீர்ப்புகளைக் கொண்டுவந்ததாகக் குற்றஞ்சாட்டப்படுவார்கள்; பூமியை வேதனையால் நிரப்பும் மோசமான இயற்கைச் சீற்றங்களுக்கும் சண்டைகளுக்கும் மனிதர்களுக்கிடையேயான இரத்தஞ்சிந்துதலுக்கும் காரணமாகக் கருதப்படுவார்கள். கடைசி எச்சரிப்பில் காணப்படும் வல்லமை துன்மார்க்கரை வெகுண்டெழச்செய்யும்; தூதை ஏற்றுக்கொண்ட அனைவர் மேலும் அவர்கள் கோபம் பற்றியெறியும்; பகை மற்றும் உபத்திரவத்தின் ஆவியை சாத்தான் இன்னும் தீவிரமாகத் தூண்டிவிடுவான்.' - EGW, GC, p 614,615. இவற்றை எல்லாம் எதிர்கொள்ள நாம் எவ்வாறு ஆயத்தப்படலாம்?*

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்

## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,
டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,
15680 கிலோ ஹெட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

## ஓய்வுநாட்பள்ளிப் பாடங்கள்

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

**YOUTUBE** க்குப் போய்,

## Mogappair SDA Tamil Sabbath School Lesson

என்று டைப் பண்ணினால் பாடங்கள் வரும்.
அந்த வாரத்துக்குரிய பாட எண்ணைத் தேடிப்பார்த்துக் கேட்கவும்.